<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 17.09.2025

**அசல் வழக்கு எண்.184/2010**

**வா.சா.**1 – Charles Babu, S/o.Sebastian

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என்னுடைய நிலத்தை மீட்டு ஒப்படைக்குமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் உள்ள மற்ற வாதிகள் யார் என்றால் முதல்வாதி என்னுடைய தாயார் இறந்து விட்டார் மற்ற வாதிகள் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். முதல் பிரதிவாதி யார் என்றால் என்னுடைய சித்தி உறவுமுறை ஆவார் என் அப்பாவின் உடன் பிறந்த தம்பியின் மனைவி ஆவார். அவருடைய பெயர் கிருஷ்ண லீலா என்கிற லீலா குமாரி ஆவார். வழக்கு சொத்து எந்த கிராமத்தில் இருக்கிறது என்றால் விட்டவிடாகை கிராமம். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கின் பரப்பளவு தெரியுமா என்றால் ஒரு ஏக்கர் 28 சென்ட் ஆகும் சர்வே எண் ஞாபகம் வந்துவிட்டது 46/2B ஆகும். வழக்கு சொத்து பாஷ்யம் ஆபிரகாம் நாயுடு என்பவருக்கு சொந்தமானது என்று சொல்லி உள்ளீர்கள் அதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாஷ்யம் ஆபிரகாம் நாயுடு என்பவரது இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. நான் பிறப்பதற்கு முன்பாக அவர்கள் இறந்துவிட்டார்கள். உங்கள் அப்பா பெயர் என்ன என்றால் செபஸ்டின் ஆகும். அவரது இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் இந்த வழக்கில் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்து உள்ளீர்கள் மற்ற வம்சாவழியினரை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் ஏற்கனவே கிரையம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். தேவதாஸ் மற்றும் அன்னம்மாள் ஆகியோர் சொத்தினை கிரையம் செய்துவிட்டு சென்றுவிட்டார்கள்

ஆகவே அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை. தேவதாஸ் என்பவர் தான் எனக்கு சொத்தினை எழுதிக் கொடுத்தார். 17.07.1963 அன்று கூர்ச்சிட்டு வாயிலாக உங்களது வகையறாக்கள் சேர்ந்த நபர்கள் வாய்மொழியாக பாகம் குறித்து கொண்டீர்கள் என்று கூறுகிறீர்கள் அந்த கூர்ச்சிட்டினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை வழக்கில் நீங்கள் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கூர்சீட்டின் அடிப்படையில் பிரித்துக் கொண்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் அதனடிப்படையில் வருவாய் ஆவணங்கள் பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் உங்களுடைய பெயரில் மாற்றிக் கொண்டீர்களா என்றால் மாற்றிக் கொள்ளவில்லை. கூர்ச்சிட்டு உங்களால் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.